# நெஞ்சுக்கு நீதி நீ!



நெஞ்சுக்கு நீதியுரைக்கின்ற வேந்தே!
நெடுவழியைக் கடந்திடவே கல்லும் முள்ளும்
பஞ்சாகக் கருதியுன்றன் கால்கள் தோய்ந்த
பச்சைரத்தம் பரிமாற்றம் மறந்தா போகும்?
பிணி, வறுமைச் சூழலிலும் கொள்கை கொண்டே
அஞ்சாமல் அயராமல் பணிகள் செய்தாய்!
ஆரூரான் உனைநினைத்தால் உதிரம் கொட்டும்!

திருக்குவளை கண்விழித்த தமிழர் முத்தே!
திராவிடர்தம் வாழ்வுயர்த்த பிறந்த கோவே!
தருக்கரையே அழிப்பதற்கெ ழுந்த ஞானி!
தலைவன்நம் அண்ணாவின் இனிய தம்பி!
உருக்கிய நல்லொளி வீசும் உயர்ந்த பொன்னாய்
உள்ளமெலாம் தமிழ்வளர்த்த உயிரே! வானில்
பெருக்கற்போல் முளைத்திருக்கும் வெள்ளிக் கூட்டப்
பெரும்படையின் தலைவனேநீ வையம் வாழ்க!

அண்ணாவின் கொள்கைத்தீ அழிந்தி டாமல்
எந்நாளும் வளர்த்திடவே எழுதிப் பேசிக்
கண்ணயராப் பணிசெய்தார்!கட்டிக் காத்தே
கழகத்தை வழிகண்ட கடமை வீரன்!
பண்ணாளும் புலவரெல்லாம் அமுதுப் பேச்சைப்
புகழ்கின்ற செந்தமிழ்ச் சொல் வாய்மைத் தீரன்!
மண்ணாளும் மடையர்கள் சூழ்ச்சி வீழ
மதிசெய்து முடித்திட்ட வல்ல சூரன்!

திரைக்கதையா? நாடகமா? எழுத்து, பேச்சின்
தினத்தாளா? கவிதைகளா? நெஞ்சை ஈர்க்கும்
உரையாடல் யாவையுமே தமிழ்தான் மூச்சு!
உணர்ச்சிதரும் கொள்கைகளில் அணிவ குப்பு!
திருக்குறளின் ஓவியமா? கவிதை கூறும்
சங்ககால இலக்கியமா? இதனில் யாரும்
நெருங்கிடாஎம் ஒப்பற்ற தலைவன் நீதான்!
நிமிர்ந்தநடை அரிமாவே கலைஞர் வாழ்க!

சோதனைகள் பலவந்து தாக்கும் போதும்
சிரிப்புடனே முகங்காட்டி வெற்றி கண்டாய்!
வேதனைகள் நெஞ்சத்தைப் பிளந்த பின்னும்
வேங்கையதாய்த் துடித்தெழுந்து பகையைக் கொன்றாய்!
சாதனைகள் செய்தவன்நீ!தமிழர் வாழ்வின்
சரித்திரத்தில் நின்றவன்நீ!அண்ணா தந்த
போதனைகள் ஏற்றவன்நீ!பெரியார் கண்ட
பகுத்தறிவுப் பாசறையைக் காத்தாய் வாழீ!

வயலெல்லாம் விளைச்சலாலே உயிரைக் காக்கும்
வடிவம்தான் நீஎமக்கு நாளும் தோன்றும்!
வயதெல்லாம் நீசெய்த தொண்டைக் கூறும்!
வரலாறு உன்பெயரைச் செதுக்கி வைக்கும்!
புயற்காற்று உன்முன்னர் பலமி ழக்கும்!
பூகம்பம்தன் முடிவை மாற்றிக் கொள்ளும்!
அயல்நாட்டார் குறிப்பெடுத்து நெஞ்சில் போற்றும்
அருளாளன் எம்கலைஞர் வாழ்க நீடே!

காட்டாறு கடந்துவந்த பாதை தோறும்
கழகத்தின் வரலாறு உன்னைக் கூறும்!
கோட்டான்கள் வழிமறித்து நின்ற போதும்
கொள்கைகளின் உறுதியினை உன்னைப் பேசும்!
ஏட்டாலும், பேச்சாலும் செந்நீர் சிந்தி
இனமொழியைக் காத்திட்ட தியாகம் சொல்லும்!
பாட்டாலும் உன்வேர்வை கொஞ்ச மன்று;
பணி செய்து கிடந்ததுதான் உனது தொண்டாம்!

உரிமையினை இழக்கலாமா? தமிழா, உன்றன்
உடம்பினிலே துணியின்றி வாழ லாமா?
நரிக்குணத்தார் பளபளப்பில் மயங்க லாமா?
நம்பெரியார், பேரறிஞர், கலைஞர் தீட்டி
வரைந்திட்ட கொள்கைகளை மறவ லாமா?
வண்டமிழர்க் கூட்டம்நீ வீழ லாமா?
திரியெழுதும் ஒளியைப்போல் நிமிர்ந்து வாழத்
திராவிடமே தளபதியார் தலைமை நிற்பாய்!

**கவிஞர் தமிழ்தாசன்**
கழக தீர்மானக்
குழுத் தலைவர்



# தலைவா! உன் புகழ்வாழ்க!



தந்தை பெரியாரும்
சிந்தைநிறை அண்ணாவும்
விந்தையென ஒருருவாய்
வந்த எங்கள் மன்னவனே!

"வீழ்வதுநாம் என்றாலும்
வாழ்வதுநம் தமிழ்"என்றே
ஆழ்மனத்தி லே,பதிய
அனைவருக்கும் சொன்னவனே!

அகரச்செந் தமிழுக்கோர்
அரணாக வாய்த்தவனே!
சிகரத்தின் உயரத்தில்
செம்மொழியை வைத்தவனே!

இன்னலுற்று வெஞ்சிறையில்
வெந்தவனே! எந்தமிழர்
முன்னேறப் படிக்கட்டாய்
முதுகெலும்பைத் தந்தவனே!

அடல்மறவர், யாருக்கும்
அஞ்சாத தமிழர்என
உடன்பிறப்புப் பெரும்படையை
உருவாக்கி வென்றவனே!

தென்புலத்தை மீட்கவந்த
தீரர்களை, வீரர்களை
அன்பு முகம்காட்டி
அரவணைத்துச் சென்றவனே!

மறையுமோ அழகுமுகம்?
மறக்குமோ ஆசைமுகம்?
உறங்கினால் கனவிலும்
உனதுமுகம்! எம்தலைவா!

நினைவுநாள் உனக்கில்லை!
நேற்று,இன்று, நாளைஉன்னை
நினையாத நாள்ஒன்று
நிச்சயமாய் எமக்கில்லை!

வாராது போல்வந்த
மாமணிநின் திருவடியை
ஈரக் கடலலைகள்
எப்போதும் வணங்கிஎழும்!

கோள்களும்உன் பெயர்போற்றிக்
கொண்டாடும்! நாட்காட்டித்
தாள்களும்உன் பொதுவாழ்வுச்
சாதனையைக் கவிபாடும்!

மூப்பிலும்நீ தமிழ்நாட்டை
முழுவதுமாய் சுற்றிவந்து
காப்பாற்றி வைத்ததனால்
கைகூப்பும் எண்டிசையும்!

மேற்குமலைத் தொடர்ச்சியிலே
மிதந்துவரும் காற்றும்,உன்
நாற்காலிச் சக்கரத்தை
நாடிவந்து முத்தமிடும்!

மழைமுகில்உன் எழுதுகோல்
மையில்,மையல் கொண்டதனால்
பொழியும்இளந் தூறல்எனும்
பூத்தூவி உனைவணங்கும்!

வெண்ணிலவின் தலைமையிலே
விண்மீன்கள் கூட்டம்இந்த
மண்மீதுன் நினைவிடத்தில்
மலர்வளையம் வைக்கவரும்!

ஓங்கும்எழிற் பூவனங்கள்
ஒன்றாகி அணிவகுத்துத்
தூங்கும்உன்றன் கல்லறையில்
தோரணமாய் காட்சிதரும்!

முன்விழித்து நீஎழுந்த
பின்,விழிக்கும் சூரியன்உன்
பொன்னடிக்குக் கண்விழித்துத்
தன்வணக்கம் சொல்லவரும்!

நோற்றவத்தால் பிறந்தவனே!
நூலகநூல் அத்தனையும்
ஆற்றாமல் படபடக்கும்!
அறிவுமகன் உன்பிரிவால்!

தோற்றமுண்டு! முடிவில்லை!
துலங்கும்உன்பேர் காலம்வென்று
வீற்றிருக்கும் பெரும்பேறு!
விழாவெடுக்கும் வரலாறு!

கலைவணங்கும்! சிலைவணங்கும்!
"கருவில்வந்த திரு"நின்னை
மலைவணங்கும்! வான்வணங்கும்!
வையகமே உனைவணங்கும்!

உலகமொழி அத்தனையும்
ஒருகுடைக்கீழ் வந்துநின்றே
தலைவணங்கும்! உனதுபுகழ்
தமிழ்போல வாழ்க!என்றே!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**

### பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! டி.சதீஷ்குமார் தலைமையில்

# துறைமுகம் மேற்குப் பகுதியில் கலைஞர் பிறந்தநாள் - மாபெரும் புகழரங்கம்!

### டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் – சொல்வேந்தர் சுகிசிவம் – தயாநிதிமாறன் – கவிஞர் சினேகன் வாழ்த்துரை!

சென்னை, ஜூன் 3

மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் டி. சதீஷ்குமார் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், துறைமுகம் மேற்கு பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞரின் 103-வது பிறந்த நாள்புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் புகழரங்கம் - டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் சொல்வேந்தர் சுகிசிவம், தயாநிதி மாறன், கவிஞர் சினேகன் ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் மேற்கு பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி1", "பன்முக ஆற்றலின் நாயகன்" "பலர் வாழ உழைத்த சூரியன்"எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் இன்று (03.06.2026, புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, பாரி முனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் துறைமுக மேற்கு பகுதி, 59வது வட்டக் கழகச் செயலாளர் டி. சதீஷ்குமார் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு, பகுதி செயலாளர்கள் எஸ். முரளி, எஸ்.ராஜசேகர் தொகுதி பார்வையாளர் இரா. நரேந்திரன், எம் விஜயகுமார், ஜி. மகாதேவன்,

பி.ஸ்ரீராமுலு ,இசட் ஆசாத் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, ஆர் கலைச்செல்வி, எம். இப்ராஹிம் கனி, பா. ஜெகதீஷ், பி. விஜயகுமார், எம். விநாயகம், பா. பிரதீப் குமார், எல். சம்பத் குமார், நா.ரஞ்சித் விஜயாலயன், பூங்கா நகர் கண்ணன், ஆர். பி. ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மே. ஜனார்த்தனன், கே.ஆர். அபரஞ்சி, மா. முத்துக் குமார், நா. சுந்தரம், எஸ். சந்தியாகு, சே. தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.பா. ஜெயராமன், மா. ஜெய்சங்கர், பா கதிரவன், ஆர் ரவிச்சந்திரன், எல். சத்திய நாராயணன், எஸ் புகழேந்தி, ஆர் ஏ. அஸ்லாம், டி கதிரவன் (எ) ராஜா, மா.பரத் குமார், கே. கவியரசு, ஆ.நா. பார்த்திபன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் கழக உயர்நிலை செயல் திட்ட உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. சொல்வேந்தர் சுகிசிவம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்பி, மக்கள் நீதி மய்யம் இளைஞரணி செயலாளர் கவிஞர். சினேகன் ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்..

மேலும் இப்பொதுக்கூட்டத்தில்,மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல்,மாநில நிர்வாகி கள் ப.ரங்கநாதன் MLA கே.எஸ்.இரவிச்சந்திரன் ExMLA கே.சந்துரு சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன் Ex.MLA தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடிExMLA வே.உமாகாந்த் கே.எஸ்.எம்.நாதன் பரிதிஇளம் சுருதி MC ஆர்.வரதன் மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன் தேவஜவகர் புனிதவதி எத்திராசன் MC மண்டல குழு தலைவர்கள்:பி.கே. மூர்த்தி கூ.பீ.ஜெயின் MC சரிதாமகேஷ் குமார் MC

பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு ஐ.சி.எப்.வ. முரளிதரன் எ.நாகராசன்MC சொ. வேலு V.சுதாகர் எம்.சாமி கண்ணு செ.தமிழ்வேந் தன் எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி. டி எஸ் பி ராஜகோபால் எம் டி ஆர் நாகராஜ் பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி எஸ்.பன்னீர்செல்வம் டி.வி. செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம் பி.உதயசங்கர் சாவித்திரிவீரராகவன் அ.நிர்மலாதேவிஏ. பி. பூர்ணிமா என் சி ரமேஷ் (எ) நீலகண்டன்

மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில்விஜய் க.வினோத் ஜெ. பாலமுருகன் ஜி.ஜெ.பிரபு எஸ்.தனசேகர் ஆர்.டி.சங்கர்நானா, சுதா தீனதயாளன் MC, ராஜேஸ்வரி ஸ்ரீதர் நா. துலுக்காணம் ஜி. தாமோதரன் துரைகண்ணன் எம்.பெரோஸ்கான் ஆர்.எஸ். சித்திக் ம.அசோக்குமார் கா. ராஜ்முகமது இரா.வீரமணி. டாக்டர் ஜி சாந்தகுமாரி எம் சி, ஜீ.வி. நாகவள்ளி. எம் சி

வட்ட கழக செயலாளர் வே.பா. பிரபாகரன் நன்றி கூறுகிறார்.

### புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

மாதவரம், ஜூன்.3-

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு டீ கப் மினிஸ்ட்ரீஸ் முதியோர் காப்பகத்தில் அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா3/6/2026 புதன்கிழமை இரவு 7 மணிக்கு தீயம்பாக்கம் காந்திநகர் பகுதியில் நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிக்கு 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமை தாங்குகிறார்.

17 வது வார்டு மாமன்ற முன்னாள் உறுப்பினர் என். கவிதா நாராயணன், 17 வது வட்ட நிர்வாகிகள் ஏ. கோவிந்தராஜ், எஸ். பாலாஜி, சி. மூர்த்தி, வி. பார்த்தசாரதி, டி. ஸ்டாலின், லதா, கே. ராஜா, பி. என். குமார், எஸ். சுரேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

17 வது வட்டம் தீயம்பாக்கம் காந்திநகர் பகுதியில் அமைந்துள்ள டீ கப் மினிஸ்டரிஸ் முதியோர் காப்பகத்தில் உள்ள முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் வி. திராவிட வீரன், கௌரி சங்கரால், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே. சண்முகப்ரியன், எஸ். சிவகுமார்,டி. வினோத், எஸ். நாகராஜ், கே. ராஜ்குமார், டி. திவாகர், எம். மைக்கேல், ஜி. கார்த்திக்,வி. சுமிர், எம்.ஜான்சன்,இ சுதர்சன்,ஜி.பூபாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்துள்ளார்.

### எம்.இ.ஸ்டாலின் தலைமை ! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில்

# 144 வது வட்டத்தில் கலைஞர் பிறந்த நாள் ! கழக கொடியேற்றி- நலஉதவிகள் !

சென்னை ஜூன் 3

மதுரவாயல் வடக்கு பகுதி, 144 வது வட்டம் சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (3-06-2026 புதன்கிழமை ) காலை 9:00 மணி அளவில் 144 வது வட்ட செயலாளர் எம்.இ.ஸ்டாலின் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளரும் வளசரவாக்கம் மண்டல குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் 144 வது வட்ட கழக சார்பில் மதுரவாயல் மார்க்கெட் , மதுரவாயல் ஈ.பி ஆபீஸ் ரோடு , எம்.எம்.டி.ஏ.காலனி ,கந்தசாமி நகர், பிள்ளையார் கோயில் தெரு , காமாட்சி அம்மன் நகர்,ஆகிய பகுதிகளில் கழக இரு வண்ண கொடியேற்றி பிரியாணி இனிப்பு மற்றும் நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர்அணி பகுதி வட்ட பாகம் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் , மகளிர் அணி நிர்வாகிகள் பாக முகவர்கள்( BLA -2) ( BDA ) கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்கும் படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் எம்.இ.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.






காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில், ஜூன் 3 செம்மொழி நாள் விழா மற்றும் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா சாலவாக்கம் பஜார் பகுதியில் கொண்டாடப்பட்டது. 103கிலோ எடை கொண்ட கேக்கினை ஒன்றிய நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது. பிரமாண்ட கேக்கினை மாவட்ட செயலாளர் க.சுந்தர் 103 திமுக கட்சி மூத்த முன்னோடிகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் போன்று மஞ்ச சால்வை கருப்பு கண்ணாடி அணிவித்து முதியவர்களுடன் கலைஞர் பிறந்த நாள் கேக் வெட்டினார். உடன் ஒன்றிய செயலாளர் குமார் நிகழ்ச்சியில், அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணி,ஒன்றிய நிர்வாகிகள் அப்பாதுரை, ரவி, துரைவேலு, கார்த்தி, ஞானசேகரன், பாலமுருகன், பாண்டியன், ரத்தினமாலா, பாபு ஷெரிப், சேகர், வெங்கட்ராமன், முரளி, கோபி, சத்தியமூர்த்தி, துணை தலைவர் நந்தா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.